பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 16உ (30—6—57) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 17உ (1—7—67) சனி [இதழ்: 14

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவுக்குச் செலவு ரூ. 22,60,500!

புதுடில்லி, சூன் 29 — "மே திங்கள் இறுதிவரையில் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவுக்கு ரூ. 22,60,500 செலவாகியிருக்கிறது" என்று மக்களவையில் அமைச்சர் சுக்லா தெரிவித்தார்.

அதிகாரிகளின் மாதச் சம்பளத்துக்கும், 'பிரயாணப் படி'க்கும் இந்தத் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கிறது!

இழப்பைச் சரிகட்ட செலவினங்கள் குறைப்பு

தமிழக அரசாங்கம் முடிவு-- முதலமைச்சர் அண்ணா விளக்கம்

திருச்சி, சூன் 29—

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதனால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட தமிழக அரசாங்க அலுவலகங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி இயன்றளவு சிக்கனத்தை மேற்கொள்ளவும், அதேபோல், கொள்முதல் செய்யும்போது ஏற்படும் தவிர்க்கக்கூடிய செலவினங்களைக் குறைப்பதன் மூலம் அதிகச் செலவைக் குறைத்துக் கொள்ளவும் தமிழக அரசு முடிவுசெய்திருக்கிறது"

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்கள்.

டெல்லியின் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறோம்!

"குறைந்த விலையில் அரிசி வழங்குவதனால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட உதவித் தொகை அளிக்கவேண்டும் என்று தமிழக அரசு, மத்திய அரசின் கதவுகளை இன்னும் தட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

பாதகம் ஏற்படாது!

"எந்த நிலையிலும் ஆட்குறைப்புச் செய்வதனால் எந்த அரசாங்க அலுவலருக்கும் பாதகம் ஏற்படாது. அவர்களுக்குத் தகுந்த மாற்று வேலை அரசினரால் கொடுக்கப்படும்.

செலவில் சிக்கனம்-- அரசால் இயலும்!

நெல் கொள்முதலில், செலவைச் சிக்கனமாக்க அரசால் முடியும். கொள்முதல்செய்யும் ஏஜெண்டுகளுக்குக் கழிவுத் தொகை வழங்குதல்— நெல்லை அரிசியாக்கும் கூலி—சணல் பைகளை வாங்குதல்—போக்குவரத்துச் செலவு—ஆகியவைகளை மாநில அரசு குறைத்துக் கொள்ளும்.

கைவிடமாட்டோம்!

எந்த நிலையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டம் கைவிடப்படமாட்டாது; மாறாக, அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

சென்னை, கோவையை அடுத்துள்ள பகுதிகளுக்கும் ஓரிரு மாதங்களுக்குள் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கப்படும்.

அடுத்து, உணவுப் பங்கீட்டு முறை (ரேஷன்) செயல்படுத்த வேண்டிய மற்றப் பகுதிகளை இரண்டு கட்டங்களாகப் பிரித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்."

'ஷிப்டு' முறை அமுலாகும்

"தேவைப்படும் இடங்களில் பி.யூ.சி.-யில் 'ஷிப்டு' முறையை அமுலாக்குவதன் அவசியத்தை, சென்னை பல்கலைக் கழகத்திடம் அரசு எடுத்துரைக்கும்"

என்று முதலமைச்சர் அண்ணா உறுதியளித்தார்கள்.

"கல்லூரிகளில் 'ஷிப்டு' முறையை அமுலாக்குவது பற்றி சென்னைப் பல்கலைக்கழகம் இன்னமும் முடிவு மேற்கொள்ளவில்லை" என்பதை, செய்தியாளர் ஒருவர், முதலமைச்சரின் கவனத்திற்குக் கொணர்ந்தார்.

"தேவை ஏற்படுமானால், 'ஷிப்டு' முறையை அமுலாக்க சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர் முன்னரே ஒப்புக்கொண்டுள்ளார்; இது சம்பந்தமாகத் துணைவேந்தரை மீண்டும் கேட்டுக்கொள்ள முயலுகிறேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

சீனத் தூதருக்கு வெளியேற்ற உத்தரவு

கென்யா நடவடிக்கை

அமைச்சர் ஒருவரைத் தாக்கிப் பேசியதால் ஆத்திரமடைந்த ஜோமோ கென்யாட்டாவின் தலைமையிலுள்ள கென்யா அரசின் நிர்வாகம், அங்குள்ள சீனத் தூதரை வெளியேற்றி பீகிங்கிலுள்ள தனது நாட்டின் தூதரை திரும்பப் பெற்றிருக்கிறது.

"கென்யாவின் உள்விவகாரங்களில் சீனர்கள் குறுக்கிடுவதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது" என, அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பற்றாக்குறை--பங்கீட்டு குறைப்புக்கு மத்திய அரசே காரணம்

உரிமையற்ற நிலையில் மாநில அரசு எதனையும் வரையறை செய்ய இயலவில்லை

கழகத் தோழர்கள் முறையீட்டுக்கு அண்ணா தந்த விளக்கம்

திருச்சி, சூன் 29—

"சர்க்கரைப் பங்கீட்டில் தமிழக அரசுக்கு அதிகாரம் இருக்குமானால் ஒரு வார காலத்திற்குள சர்க்கரைச் சிக்கலைத் தமிழக அரசு தீர்த்துவிட முடியும்; சர்க்கரைப் பற்றாக்குறைக்கும் பங்கீட்டுக் குறைப்புக்கும் மத்திய அரசே காரணம்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று இங்கு தெரிவித்தார்கள்.

சர்க்கரைப் பற்றாக்குறை பற்றி கழகத் தோழர்கள் முதலமைச்சரிடம் முறையிட்டார்கள்; அண்ணா அவர்கள் பதிலளித்ததாவது:—

"சர்க்கரையின் உற்பத்தி—அதைப் பங்கிட்டுக் கொடுப்பது—சர்க்கரையின் விலையை வரையறை செய்வது—ஆகியவைகளில் எந்த உரிமையும் தமிழக அரசுக்குத் தரப்படவில்லை; இந்த உரிமை மாநில அரசுக்கு இல்லை; மத்திய அரசின் பொறுப்பில் இந்த அதிகாரம் இருக்கிறது.

"தமிழகத்திலிருந்து அதிக அளவு வெல்லம் மகாராட்டிரத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சர்க்கரைக்குப் பதிலாக வெல்லத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காக, வெல்ல ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலாமா என்று அரசு சிந்தித்து வருகிறது."

தமிழக எழுச்சி நாள் ஆந்திர முதலமைச்சர் விழிப்பு!

ஐதராபாத், சூன் 29—

"தமிழகத்தை ஆளுகின்ற தி.மு. கழகம், தமிழகத்தில் எஃகு-இரும்புத் தொழிற்சாலை நிறுவ வேண்டும் என்பதற்காகப் 'போராட்டம்' நடத்தப்போவதாகக் கூறப்படுவது பற்றி நான் ஏதும் குறிப்பிட்டுக் கூற முடியாது. ஆனால், தி.மு. கழகம் போராட்டத்தில் ஈடுபடும் விவகாரத்தில் நான் விழிப்பாக இருக்கிறேன்; அதன் எதிர்விளைவுகளையும் கவனித்து வருகிறேன்"

என்று ஆந்திர முதலமைச்சர் கே. பிரும்மானந்த ரெட்டி, ஆந்திர சட்டமன்றத்தில் கூறினார்.

விசாகப்பட்டினம் இரும்பு எஃகு தொழிற்சாலை தொடர்பாகக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை அளிக்கையில், முதலமைச்சர் கே. பிரும்மானந்த(ரெட்டி) மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஐந்தாவதாக இந்தியத் துணைக் கண்டத்தில் நிறுவப்பெறவிருக்கும் இரும்பு எஃகுத் தொழிற்சாலையை, தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, விசாகப்பட்டினத்தில் நிறுவத்தான் கருதிக் கொண்டிருக்கிறார் என்று நான் மதிப்பிடுகிறேன்.

"விசாகப்பட்டினத்தில் ஐந்தாவது எஃகு இரும்புத் தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்ற கோரிக்கையை நல்ல இணக்கமான நிலைமை ஏற்படும் போது நாம் வற்புறுத்தவேண்டும்.

"ஆந்திரத்திற்குத்தான் இரும்பு ஆலை வேண்டும் என்று கோரும் முயற்சிகளில் தளர்ச்சியடைய வேண்டியதில்லை."

இரங்கூனில் இராணுவச் சட்டம்

இரங்கூனில் நடைபெற்ற சீனர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இரங்கூனில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டத்தின் விளைவாக, இருபது பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நஷ்டஈடு பிரச்சினை எழ இடமில்லை

"75 மைல் தூரத்துக்கு மேல் உள்ள 'ரூட்'களை—இப்போது பஸ் விடுபவர்களின் பெர்மிட் காலம் முடிவடைந்தவுடன்—அரசு மேற்கொள்ளும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

"அம்மாதிரி எடுத்துக்கொள்ளப்படும் ரூட்களில் ஏற்கனவே பஸ் விட்டவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும்" என்ற கோரிக்கையை அவர் நிராகரித்தார்.

"அரசின் முடிவின் பலனாக அவர்களுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படப்போவதில்லை; அப்படி இருக்கையில் நஷ்டப் பிரச்சினை எங்கிருந்து வந்தது?" என்று அவர் வினவினார்.

"பஸ் சொந்தக்காரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பஸ் விடுவதற்கு அரசு அனுமதியளிக்கிறது. குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின் அந்தப் பெர்மிட்டைப் புதுப்பிக்கலாம்; அல்லது அரசினரே அந்த ரூட்டை எடுத்துக்கொள்ளலாம்; எனவே, நஷ்டஈடு பிரச்சினை எழவில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

"ரூட்களைத்தான் அரசு எடுத்துக் கொள்கிறதே தவிர, பஸ்களை அல்ல" என்று அவர் தெளிவாக்கினார்.

"75 மைல் தூரத்துக்கு மேல் உள்ள ரூட்களை மேற்கொள்வதென அரசு செய்த முடிவு முற்றிலும் சட்டபூர்வமானதே என்று சட்ட இலாகா கருத்துத் தெரிவித்துள்ளது" என்றும் அவர் சொன்னார்.

புரட்சிகரமானதில்லையா?

"தி.மு.க. அரசின் பட்ஜெட்டில் புதிதாகவோ, புரட்சிகரமானதாகவோ எதுவுமில்லை" என்று காங்கிரசார் சொன்னது பற்றிக் குறிப்பிட்டுக் கூறுகையில், 'தனியார் நடத்தும் மூன்று மின்சார விநியோக நிறுவனங்களை மேற்கொள்ளுவது என அரசு செய்துள்ள முடிவு புரட்சிகரமானதில்லையா?" என அவர் வினவினார்.

உணவுப் பங்கீடு உயர்த்தப்படுமா?

பெறவேண்டிய இடத்திலிருந்து பெறப்பட்டால் உயர்த்தப்படலாம்

காங்கிரசு உறுப்பினர் கேள்விக்கு அண்ணா பதில்

சென்னை, சூன் 30—

"தற்போது கோதுமை கொடுக்கப்படுவதில்லை; எனவே அரிசிப் பங்கீடு மக்களுக்குப் போதுமானதாக இல்லை என்று உணரப்படுவதால், அரிசிப் பங்கீட்டை உயர்த்திக் கொடுப்பதற்குச் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?"

என்று இன்று சட்டமன்றத்தில் திரு. கே. வினாயகம் உணவமைச்சரைக் கேட்டபோது, முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு,

"பெறவேண்டிய இடத்திலிருந்து பெற முயற்சி செய்யப்படுகிறது; அதிகம் கிடைத்தால் பங்கீட்டையும் அதிகப்படுத்த ஆவன செய்யலாம்"

என்று பதிலளித்தார்கள்.

வி. கே. கோதண்டராமன்:—

"தமிழ் மக்களும் கோதுமை உண்ணப் பழகிவிட்டபடியால் இங்கு கோதுமை தேவைப்படுகிறது. மத்திய அரசினர் நமக்குக் கொடுக்கவேண்டிய அளவுக்குக் கோதுமை கொடுக்கிறார்களா?"

அமைச்சர் மதியழகன்:—"கடந்த வாரத்தில்தான் இதுபற்றி ஏற்பாடாயிற்று. இனி கோதுமை வாராவாரம் கொடுக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. மாதம் 10 ஆயிரம் டன் கோதுமை கொடுக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. மேலும், முதலமைச்சர்கள் மாநாட்டின் போது நமது முதலமைச்சரும், நானும் வற்புறுத்தியதன் பேரில் மேற்கொண்டு 2,000 டன் கோதுமை கொடுக்க ஒப்புக் கொண்டார்கள். கேரளத்துக்கு நாம் 10 ஆயிரம் டன் அரிசி கொடுத்ததற்குப் பதிலாக கோதுமைப் பொருளாக 14,000 டன் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; எனவேகோதுமை நிலைமை சீராக இருக்கும் என்று நம்பப்படுகிறது."

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன் எம்.ஏ.எம்.ஆ.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 16 (30—6—67) வெள்ளி

குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

அரசியல் விடுதலையை இத்துணைக்கண்டம் பெற்ற நாள் முதற்கொண்டு இருபதாண்டுக்காலம் தொடர்ந்தாற்போல், காங்கிரசுக் கட்சியே தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்திருக்கிறது. இந்த இருபதாண்டுக்காலத்தில், தமிழகத்தின் தலைநகரான சென்னையின் மக்கள்தொகையும், ஆண்டுக்கு ஆண்டு பெருகி வந்திருக்கிறது.

நகரத்தின் மக்கள்தொகை பெருகப் பெருக, குடிநீர் நெருக்கடி மென்மேலும் வளர்ந்துவந்தது. இதற்குத் தக்க பரிகாரம் தேட வேண்டும் என்பது பற்றிக் கவலைகொள்ளாமலேயே காலங்கடத்தி வந்திருக்கிறது காங்கிரசுக் கட்சி!

நகரக் குடிநீர்ப் பிரச்சினை குறித்துக் காங்கிரசு ஆட்சி அலட்சியப்படுத்தி வந்திருக்கின்ற இத்தருணத்தில், மாநகராட்சியின் நிர்வாகம் கழகத்தினிடம் மாறிவிட்டது. இம்மாற்றம், காங்கிரசுக் கட்சிக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தந்துவிட்டது. இதனால், மாநகரத்தின் குடிநீர்ப் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண்பது குறித்துத் தனக்கும் கவலை இருப்பதாகக் காட்டிக்கொண்டு வந்ததையும், காங்கிரசுக் கட்சி அறவே கைவிட்டுவிட்டது!

இப்பொழுது, தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டதும், சென்னை நகரக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு முதலிடம் கொடுத்து, அதற்குரிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இதற்காக வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைச் சென்னை நகரத்துக்குக் கொண்டுவரும் திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. இத்திட்டத்தை உடனடியாகத் துவக்க இருப்பதை உறுதி செய்யும் வகையில் தமிழக அரசு, இதற்குக் குறிப்பிட்ட தொகையைத் தனது வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியும் இருக்கிறது, இக்குடிநீர்த் திட்டம் பற்றி முதலமைச்சர் அவர்கள், பின்வருமாறு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார் :—

"காவிரியாற்றிலிருந்து நீரைக் கொணர்வதற்காக ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டுவரும் திட்டத்தை, இனியும் காலம் கடத்தாமல் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. நடப்பு ஆண்டிலேயே இந்த முக்கியத் திட்டத்தைத் துவக்கிவைப்பதற்கென, தற்போதைய வரவு – செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத்துக்கு முன்னரே எடுத்திருக்கவேண்டிய அரசின் இம்முடிவை, சென்னை மாநகரப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்பதில் எனக்குத் தினையளவும் ஐயமில்லை."

"இந்தக் குடிநீர்த் திட்டத்துக்காகக் கொஞ்சம் பணம் ஒதுக்கிவிட்டால் மட்டும்போதுமா? திட்டம் உடனடியாகத் துவக்கப்படும் என்பதற்கு என்ன நிச்சயம்?" என, அரசியல் காழ்ப்பின் காரணமாகக் கேட்கக்கூடிய காங்கிரசுக் கட்சியினரும் இருக்கத்தான் இருக்கின்றனர். அவர்கள் அனைவரின் வாயும் அடைத்துப் போகும் வகையில், இக் குடிநீர் ஏற்பாட்டினை உடனடியாகத் துவக்குவதில், இன்றைய அரசு எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாக, பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றார்.

"காவிரித் திட்டம் வேறு—வீராணம் திட்டம் வேறு என்று உறுப்பினர் நினைத்துக்கொண்டிருக்கின்றார்போலிருக்கிறது; அவை வெவ்வேறு அல்ல. நிறைவேற்ற இருப்பது காவிரித் திட்டம்தான். இத்திட்டப்படி, வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ரூ. 21 கோடி செலவாகும்.

"இது, திறந்த கால்வாய்முலம் கொண்டுவரும் திட்டம் அல்ல; அப்படிக் கொண்டுவருவதால் தண்ணீர் விரயமாகும். ஆகவே, குழாய்முலம் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. வழியில் சில முக்கியப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க முடியுமா என்பது ஆராயப்படும்.

"சென்னை நகருக்கு 4 கோடி காலன் தண்ணீர் அதிகம் கிடைக்கவேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். இதற்கு வீராணத்திலிருந்து விநாடிக்கு 75 கன அடி தண்ணீர் எடுக்கவேண்டும். இதனால் பாசன வசதி கெடாது என்றாலும், குறுகியகால நெற்பயிர் ஒருவகையில் பாதிக்கப்படுமா என்ற ஐயப்பாடு விவசாயிகளுக்கு ஏற்பட்டு, அமைச்சரிடமும் முறையிட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய சங்கடத்தைப் போக்கும்வகையில் மேட்டூரிலிருந்து வீராணத்துக்கு விநாடிக்கு 1,300 கன அடி தண்ணீர் கொண்டுவரும் விஷயம் ஆராயப்படும்.

"ஜேடர்பாளையம் திட்டம் என்றால், நகருக்கு 460 மைல் தொலைவிலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டும்; வீராணம் திட்டப்படி 135 மைல் தொலைவிலிருந்துதான் தண்ணீர் வர வேண்டும்; ஆகவே, ஜேடர்பாளையம் திட்டத்தைவிட வீராணம் திட்டம்தான் ஏற்றது; ஜேடர்பாளையம் திட்டத்தை நிறைவேற்றுவதானால் செலவு இரண்டு மடங்கு அதிகமாகும்."

இக்கருத்தை, சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு விடை தரும் முறையில், அமைச்சர் கருணாநிதி அவர்கள் அறிவித்திருக்கின்றார்.

இறுதியாக இத்திட்டம் குறித்து அமைச்சர்,

"எந்த இடையூறு ஏற்பட்டபோதிலும் இத்திட்டத்திற்கான பணி இந்த ஆண்டே துவங்கப்படும்"

என உறுதி கூறியிருப்பதன் வாயிலாக, சென்னை நகர மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியிருக்கின்றார்.

—கா. க.

மக்கள் தொகை பெருகி வருகிறது

அதிகாரி முன்னறிவிப்பு

இந்தியாவில் ஒவ்வொரு ஒன்றரை வினாடிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது; இந்த விகிதத்தில் ஒரு நாளில் 55 ஆயிரம் குழந்தைகளும், ஒரு ஆண்டில் 2.1 கோடி குழந்தைகளும் பிறக்கின்றன.

இந்திய மக்கள் தொகை இப்போது 57 கோடியைத் தாண்டிவிட்டது. தற்போதைய விகிதத்தில் மக்கள் தொகை பெருகுமானால் அடுத்த 28 ஆண்டுகளில் நம் மக்கள் தொகை இரு மடங்காகிவிடும்.

நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டிலும் 2.1 கோடி குழந்தைகள் பிறக்கின்றன; 80 இலட்சம் மரணங்கள் நிகழ்கின்றன; எனவே, ஒவ்வொரு ஆண்டிலும் 1.3 வீதம் மக்கள் தொகை பெருகுகிறது.

இந்தத் தகவலை, மத்திய சுகாதார குடும்பக்கட்டுப்பாடு இலாகாவைச் சேர்ந்த குடும்பக் கட்டுப்பாடு ஆணையா டாக்டர் தீபக் பாட்டியா தெரிவித்தார்.

"பொருளாதார அபிவிருத்தியின் மூலம் கிடைத்த பலன்கள், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் நசுக்கப்பட்டுள்ளன" என்று அவர் குறிப்பிட்டார்.

பிறப்பு விகிதத்தை, ஆயிரம் பேருக்கு 41 என்றிருப்பதை ஆயிரம் பேருக்கு 25 ஆகக் குறைப்பது தான் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களின் குறிக்கோளாகும்" என்றார் அவர்.

"மக்கள் தற்போதைய விகிதத்தில் பெருகிவருமானால், தினந்தோறும் குறைந்தது 250 ஆரம்பப் பள்ளிகளைத் துவக்கவேண்டியிருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

"ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பள்ளிகளை நடத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 45 இலட்சம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். இந்தியாவில் தற்போது 37 இலட்சம் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன; என்றாலும், சுமார் 6.38 கோடி குழந்தைகளுக்கு இன்னமும் பள்ளிக்கூட வசதி கிடைக்கவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நாட்டில் ஏற்கனவே 800 இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. மேலும் கூடுதலான மக்களுக்கு வீடு வசதிகள் கிடைக்க வேண்டுமென்றால், தற்போதைய பற்றாக்குறையைச் சரிக்கட்டிய பிறகு ஆண்டுக்குக் குறைந்தது 24 இலட்சம் வீதம் வீடுகள் கட்ட வேண்டியிருக்கும். இவை எல்லாம் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இழப்பை ஈடுகட்ட இப்போது இயலாதாம்

மதுவிலக்கை அமுலாக்கும் மாநிலங்களுக்குக் கைவிரிப்பு

"மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்ற வழிகாட்டிக் கோட்பாடுகள் மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்பட்டனவா?" என்று மக்களவையில் கழக உறுப்பினர் இரா. செழியன் வினவினார்.

திரு. இரா. செழியன் இவ்வினாவை எழுப்பியதைத் தொடர்ந்து மற்றும் சில உறுப்பினர்கள் இது தொடர்பாக வலியுறுத்திக் கேட்டனர்.

உள்துறைத் துணை அமைச்சர் சுக்லா பதிலளிக்கையில் தெரிவித்ததாவது :—

"சில மாநிலங்கள் மதுவிலக்கை ஏற்றுக்கொள்ளவில்லை; மாநிலங்கள் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளன.

"மதுவிலக்கினால் மாநில அரசுக்கு ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடுகட்ட வேண்டும் என்று மாநிலங்கள் கேட்கின்றன. முழு அளவுக்கு ஈடுசெய்ய இயலாது என்பது இப்போது உள்ள நிதி நிலவரத்தில் இயலாததாகும்."

'புரட்சி'த் திட்டங்களைப் புரிந்துகொள்ளவில்லையா?

காங்கிரசாரின் குறைகாணும் போக்கு

சட்டமன்றத்தில் ந. தர்மலிங்கம் கண்டனம்

"காங்கிரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர், 'இந்த வரவு—செலவுத் திட்டத்தில் புரட்சிகரமே இல்லை'யென்று சொன்னார்; எதைப் புரட்சிகரமானது என்று அவர் நினைக்கிறார் என்று தெரியவில்லை. கலப்புத் திருமணத்திற்குப் பொற் பதக்கம் வழங்குவது புரட்சியில்லையா? 75 மைல்களுக்கு மேல் ஓடக்கூடிய பஸ்களைத் தேசிய மயமாக்குவது புரட்சி இல்லையா? மின் நிலையங்களை அரசு ஏற்றுக்கொள்வது புரட்சி இல்லையா? புன்செய் நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது புரட்சி இல்லையா? 'சீரணி' என்ற அமைப்பு ஏற்படுத்த இருப்பது புரட்சி இல்லையா? அவர் எதை புரட்சி என்று கருதுகிறார் என்று புரியவில்லை"

என்று, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ந. தர்மலிங்கம், தமிழகச் சட்டமன்றத்தில், வரவு–செலவுத் திட்டத்தின் மீது நடந்த பொதுவிவாதத்தில் உரையாற்றுகையில் வினவினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இப்போது எதிர்க் கட்சியினர் தெரிவிக்கின்ற குறைபாடுகள் இருபது ஆண்டுக்காலமாகவே இருந்துவருகின்ற குறைபாடுகள் தாம் என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த 20 ஆண்டுகளாக இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்கும் வகையில் மூன்று மாத காலத்திற்குள்ளாகப் பல திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருப்பது மகத்தானதாகும்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த வரவு–செலவுத் திட்டத்தைக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் கூறுகிறார்களே தவிர, இருக்கின்ற சங்கடங்களை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடந்த 20 ஆண்டுக்காலத்தில் பொதுமக்களிடம் எதையெதைச் செய்வதாகச் சொன்னார்களோ, அவற்றையெல்லாம் செய்யாதுவிட்ட நிலையில், இந்த அரசு மூன்றே மாதத்திற்குள்ளாக அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

புன்செய் நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது; 75 மைல்களுக்கு அப்பால் ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களை நாட்டுடைமையாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் மூன்று மின்நிலையங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாகின்றன.

கலப்பு மணம் செய்துகொண்டு நாட்டுக்கு வழிகாட்டியாகவும், ஒன்றே குலம் என்ற வகையில் சாதி—மத பேதத்தை அகற்றும் வகையில் மணம் செய்துகொள்கிறவர்களுக்குப் பரிசு வழங்கவும், பொற்பதக்கம் வழங்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

சீர்கேடுகளைக் களைவதற்காகச் சீரணி ஏற்படுத்தப்பட இருக்கிறது. விற்பனை அளவு வரம்பை உயர்த்தியதன் மூலம் 16,000 பேர்களுக்கு மேல் வரி நீக்கத்தால் பயன்பெற்றிருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 11 கோடிக்கு அதிகமாகச் செலவழிக்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றுள்ள உணவு நெருக்கடியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள, பாசன வசதிகளும் வடிகால் வசதிகளும் மிக மிக இன்றியமையாதவை. ஆகவே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

காலம் வந்துவிட்டது!

சென்னை, சூன் 27—

"அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது, மத்திய அரசிடம் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டன; காரணம், பாகிஸ்தான் ஏற்பட்டதுதான்!

"பாகிஸ்தான் அமைந்த காரணத்தால், அதுபோன்ற உணர்வு மற்ற பகுதிகளுக்கு வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில், அளவுக்கு மீறி மத்திய அரசிடம் அதிகாரங்கள் திணிக்கப்பட்டன!

"அதன் முடிவு என்ன ஆயிற்று? மாநிலத்தின் எவ்வளவு சிறிய தேவைக்கும்கூட மத்திய அரசிடம் ஓட வேண்டியிருக்கிறது! அவர்களைத் துதிபாட வேண்டியிருக்கிறது—முன்பு ஆட்சியில் இருந்தவர்களைப்போல்! அல்லது விவரங்களை எடுத்து வைத்துக் கடுமையான சொற்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது — எங்களைப்போல்! ஆகவே, இப்படிப்பட்ட நிலையை வெகுவாக 'பட்ஜெட்' அறிக்கை விளக்குகிறது!

"பட்ஜெட் என்பது புள்ளிவிவரங்களைத் தருவதோடு, மாநில—மத்திய அரசுகளின் உறவு முறைகளைப் பற்றியும் எடுத்துரைப்பதாக ஏன் இருக்கக்கூடாது?

"மத்திய அரசுக்கும் — மாநில அரசுக்குமிடையேயுள்ள நிதித் தொடர்புகளைச் சீர்திருத்தி மீண்டும் வகைபடுத்தப்பட வேண்டும் என்றுதான் நிதிக் கமிஷன்கள் கூறியிருக்கின்றன.

"மத்திய அரசு, மாநில அரசுக்குத் தரும் நிதியை மூன்று வகையாகப் பிரிக்கலாம்; ஒன்று—வரிகளில் ஒதுக்குபவை; இரண்டு—மானியம்; மூன்று—திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு!

நாள் ஆக ஆக, முன்னிரண்டு துறைகளில் நிதி கிடைப்பதை விட, திட்டத்திற்கான நிதி அதிகம் கிடைக்கிறது! மூன்றாவது வகை நிதி, மற்ற இரண்டு வகைகளையும் மிஞ்சிவிட்டது!

அப்படிப்பட்ட அதிகமான நிதி, எப்படி ஒதுக்கப்படுகிறது? எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது?—அவர்கள் மனதிற்குத் தகுந்தவாறுதான் ஒதுக்கப்படுகிறது!

இந்த முறையால், நாம் பல காலம் பாதிக்கப்பட்டிருக்கிறோம்! கடுமையான பதத்தைப் பயன்படுத்த வேண்டுமானால், நமக்குச் சேரவேண்டியது திருடப்பட்டிருக்கிறது!

ஆகவே, நிதி உட்பட பல விஷயங்களில் மத்திய—மாநில அரசுகளின் உறவு முறை சீர்திருத்தப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது!"

---முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்ற மேலவையில்)

1,500 தொழிலாளர்களைப் பட்டினி போடும் அநீதி!

காவேரி ஆலை நிர்வாகத்தின் போக்கு

கடந்த 2 ஆண்டுக் காலமாக காவேரி மில் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சம்பளப்பாக்கி ரூ. 7½ இலட்சத்தைக் கொடுக்காமல் நிர்வாகம் சண்டித்தனம் செய்து வருவதால், கடந்த 18—5—67 முதல் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவந்தார்கள்.

சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டதால் இறுதியாக 8—6—67 அன்று தமிழக அரசின் வேண்டுகோளுக்கு இணங்க 13—6—67 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் திருப்பி பெற்றுக் கொண்டு வேலைக்குச் சென்றும், நிர்வாகத்தினர் வேலை கொடுக்காமல் காரணமின்றி 'லே—ஆப்' செய்து வருகிறார்கள்.

மேலும் ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களுக்கும் இன்னும் சம்பளம் பட்டுவாடா செய்யாமல் கரமம் தாழ்த்தி 1,500 தொழிலாளர்களின் குடும்பங்களைப் பட்டினி கிடக்கும்படிசெய்து வருகின்றனர்.

அனகாபுத்தூரில் நடந்ததென்ன?

காங்கிரசு ஏட்டின் செய்திக்கு மறுப்பு

அனகாபுத்தூர் நகர தி.மு.க. செயலாளர் ஆர். மணி அறிவிப்பு தாவது :—

"26—6—67 தேதியிட்ட காங்கிரசு நாளிதழ் ஒன்றில், 'காங்கிரசுக்காரருக்கு அதிக வீட்டு வரி விதிப்பு' என்றுதலைப்பிட்டுப் பொய்யான சேதி வெளியாகியுள்ளது.

அனகாபுத்தூர் நகரப் பஞ்சாயத்து, தி.மு.க. நிர்வாகத்தில் உள்ளது என்பது சரியில்லை; மொத்தம் உள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை 14; அவர்களில் தி. மு. கழக உறுப்பினர் ஆறு பேர்தான்.

இங்ஙகரப் பஞ்சாயத்துத் தலைவர் பி. எஸ். நடராசன் என்பவர் காங்கிரசுக்காரர்; நகரக் காங்கிரசுக் கமிட்டியின் முக்கியஸ்தருமாட்டார்; எனவே, நகர தி.மு.க. செயலாளர் என்ற முறையிலும், இங்கரப் பஞ்சாயத்து உறுப்பினர் என்ற முறையிலும் இந்தப் பொய்யான செய்தியை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மேற்படி இதழில் கூறியுள்ள காங்கிரசுக்காரர் எம். பாலயா (செட்டியார்) என்பவர், நகரப் பஞ்சாயத்து வரி வசூல் சிப்பாதி ஈ. ஆர். ஞானப்பிரகாசம் என்பவரை, 16—8—66 அன்று வரி வசூலிக்கப் போகும் போது அடித்து விட்டார். பல்லாவரம் போலீசில் இதுபற்றிப் புகார் செய்யப்பட்டது; எம். பாலயா (செட்டியார்) மீது போலீசார் வழக்கு தொடர்ந்தனர். சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தச் சம்பவம், தி. மு. கழகம் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன்பே, காங்கிரசு ஆட்சியில் நடைபெற்றது.

எம். பாலயா (செட்டியார்) என் பவர்மீது, தி. மு. கழகப் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு புதிதாக எந்த வரிவையும் விதிக்கவில்லை, எந்த வரியும் கட்டப்படவுமில்லை. காங்கிரசுக்காரர் ஆட்சியில்—காங்கிரசு பொறுப்பில் உள்ள நகரப் பஞ்சாயத்து, 1965—66-ம் ஆண்டில் நிர்ணயித்த வரியாகும்.

இந்த வரி விதிப்பின்மீதுதான் சென்னை உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இங்கரப் பஞ்சாயத்து மூலதன மதிப்பு ரூ. 100-க்கு 25 காசுகள்தான் வரி வசூல் செய்து வருகிறது. எம். பாலயா (செட்டியார்) புதிதாகக் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளார். இக் கடைகளுக்கு 1965—66-ல் வரி விதிப்புச் செய்யப்பட்டது. இந்த வரியை எம். பாலயா (செட்டியார்) கட்டவில்லை. இன்னீமு ஜப்தி நடவடிக்கை எடுக்கும் தருணத்தில், உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்."

வெற்றிலைப் பயிருக்கு இனி ஆபத்தில்லை!

நோயைத் தவிர்க்க புதிய கண்டுபிடிப்பு

சென்னை, ஞன் 29—

தமிழ்நாட்டில் வெற்றிலைப் பயிரைப் பூச்சி தாக்கி ஆண்டுதோறும் காசை விரையிடும் பறறி இந்த மாநிலத்தின் வெற்றிலைக் கொடிக் காரர்கள் இனி அஞ்சத் தேவை யில்லை.

சேலம் மாவட்டம் போத்தனூரில் உள்ள வெற்றிலைப் பயிர் ஆராய்ச்சி நிலையம், அப்பயிர் நோய் குறித்து ஆராய்ச்சி நடத்தி, 'செம்புப் பூச்சி மருந்துகளைக் கொண்டு அந்நோயை வெற்றிகர மாகக் கட்டுப்படுத்த முடியும்' என்று கண்டுபிடித்துள்ளது.

வெற்றிலைப் பயிரானது அதன் இலைகளுக்காகவே பயிரிடப்படுவ தாகும். இந்தியாவில் சுமார் 80,000 ஏக்கரில் வெற்றிலைக் கொடிக் கால்கள் உள்ளன; அவற்றில் 16,000 ஏக்கர் தமிழ்நாட்டில் உள் ளது.

'பைதோப்ரோரா பாராசிடிகா' எனனும் பூசசினால் வெற்றிலைகள் வாடி வதங்கிவிடும் நோயை உண் டாக்குகின்றது. அந்நோய் முக்கிய மாக இந்தியா, பர்மா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் அந்நோய் வெற் றிலை பயிரிடுவோருக்கு, குறிப்பாக சேலம் மாவட்டம், திருச்சி, கோவை மாவட்டங்களின் பகுதி களில் பெரும் இழப்பை உண் டாக்கி வருகிறது.

வெற்றிலைப் பயிர் மூலம் ஈல இலாபம் காண்பதற்கு அந்நோய் கடந்த 10 ஆண்டுகளாகப் பெரும் தடையாக இருந்துவருகிறது.

அந்நோய் ஆண்டின் பெரும் பாலான மாதங்களில் காணப்படு கிறது என்றாலும், தமிழ் நாட்டில் அக்டோபர் முதல் ஜனவரி வரை யில் உள்ள காலத்தில் அதாவது குளிர்காலத்தில்தான் கடுமை யாகத் தாக்குகிறது.

மயிலம் தி, மு. க,

திண்டிவனம் வட்டம் மயிலம் கிராமத்தில் தி. மு. கழகக் கிளை முதல் அமைப்புக் கூட்டம் நடை பெற்றது. திரு. ஆர். பொன்னம் பலம் வரவேற்புப் பேசினார். மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் நடராசன் தலைமைதாங் கினார்; திண்டிவனம் தி.மு.க. வட் டச் செயலாளர் ஏ. தங்கவேல் சொற்பொழிவாற்றினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கழக நிர் வாகிகள் விவரம் :—

அவைத் தலைவர் : ஏ. வீரப்பன்; செயலாளர் : எஸ். இராசகோ பால்; துணைச் செயலாளர் : பி. செபராவ்; பொருளாளர் : பி. இராமசாமி; வட்டப் பிரதிநிதி : கே. இப்ரகீம்; செயற்குழு உறுப் பினர்கள் : வி. குத்திரசாமி, கே. குப்பன், எம். கோவிந்தராசு, சி. சொக்கலிங்கம், ஏ. இலட்சு மணன்.

சென்னை 21-வது வட்டம் மக்கள் முனேற்ற மன்றம்

சென்னை 21-வது வட்டத்தில் மக்கள் முன்னேற்ற மன்றத் துவக்க விழா 19—6—67-ல் நடை பெற்றது. தோழர் தீனதயாளன் தலைமை வகித்தார்; சு. மோகன் ராசு மன்றப் பெயர்ப்பலகையைத் திறந்துவைத்தார்; எஸ். ஏ. செல்லையா, மற்றும் மக்கள்தோழர் களும் விழாவில் கலக்குகொண்டனர்.

மதச் சடங்குகளின் பேரால் உணவு பண்டம் பாழ்!

சட்டமன்ற மேலவையில் கேள்வி

சென்னை, ஞன் 28—

"மதச் சடங்குகளுக்கு உணவுப் பொருட்களைப் பயன்படுத்து வதைத் தடைசெய்யும் எண் ணம் இல்லை"

என்று உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவித்த தாவது :—

"மதச் சடங்குகளிலும், பொது வழிபாட்டு இடங்களிலும் உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே சட்டம் இருக்கிறது. மதச் சடங்கு களில் குறுக்கிடும் எண்ணம் அரசுக்குக் கிடையாது."

"பிரசாதம் தயாரிப்பதற்கும், பாலாபிஷேகம் செய்வதற்கும் தடை விதிக்கப்படுமா ?"

என்று கேட்கப்பட்ட கேள்விக்கு 'அப்படிப்பட்ட எண்ணம் இல்லை' என்று அமைச்சர் பதிலளித்தார்.

மத்திய அரசு செலவு 15 ஆண்டுகளில் எட்டு மடங்காக உயர்ந்த விசித்திரம்!

புதுடில்லி, ஞன் 28—

மத்திய அரசின் மொத்தச் செலவு கடந்த 15 ஆண்டுகளில் எட்டு மடங்கு அதிகரித்துள்ளது.

1950—51-ல் மத்திய அரசின் செலவு ரூ. 504 கோடி; 1955—56-ல் ரூ. 969 கோடி யாக அதிகரித்தது. 1960—61-ல் ரூ. 1,806 கோடி யாக உயர்ந்தது; 1965—66-ல் ரூ. 3,993 கோடி ஆகிவிட் டது!

சென்னை 88-வது வட்டம் எம் ஜி.ஆர். பகுத்தறிவு மன்றம்

சென்னை 88-வது வட்டம் ஆழ் வார்பேட்டைத் தெருவில், எம். ஜி. ஆர். பகுத்தறிவு மன்றம், 27—6—67-ல் அமைக்கப்பட்டது. வட்டச் செயலாளர் கு. இளமதி தலைமைவகித்தார்; மு. கபாலி அவைத் தலைவராகவும், வி. தேவேந்திரன் செயலாளராகவும், நாகராசன் துணைச் செயலாளராக வும், சண்முகம் பொருளாளராக வும், மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

சென்னை 21-வதுவட்ட என். எஸ். கே. நினைவு மன்றம்

சென்னை 21-வது வட்டம் கல வாணர் என். எஸ். கே. நினைவு மன்ற நிர்வாகிகள் தேர்தலில் வட்டச் செயலாளர் கே. எம். தீன தயாளன் ஆணையாளராக இருந்து நடத்திவைத்தார்; தேர்ந்தெடுக் கப்பட்டோர் விவரம் :—

அவைத் தலைவர் எஸ். சீனி வாசன்; செயலாளர் ஏ. சுப்பு ராயலு; துணைச் செயலாளர் சிவா னந்தம்; பொருளாளர் எஸ். சாந்திவீரன்.

மறைவு

"சென்னை 4-வது வட்டக் கழகத் தோழர் சி. எஸ். சுப்பிரமணியம் 24—6—67-ல் இயற்கையெய்தி னார் என்பதையும் 25—6—67-ல் சவ அடக்கம் செய்யப்பெற்றது என்பதையும் வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்வதுடன் அவரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும் பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலே வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று வட்டக் கழகச் செயலாளர் பி. கே. மூர்த்தி தெரிவிக்கிறார்.

* * *

"நீலகிரி வட்டத் தி. மு. கழகத் துணைச் செயலாளர் கா. இராமன் அவர்களின் தந்தை என். காரி கவுடர் 20—6—67-ல், ஒரசோலை யில் இயற்கையெய்தினர் என் பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று ஒரசோலை தி.மு.க. செயலாளர் ஜே. இராமன் அறிவிக்கிறார்.

போருக்குமுன் வீராப்புப் பேசினர் ஆற்றல் நேரத்தில் செயலிழந்துவிட்டனர்

ஏவுகணைத் தளங்கள் எதற்கும் பயன்படவில்லை-- 'என்ன காரணம்' என்பதை இப்போது ஆராய்கின்றனர்

கோடிக்கணக்கான பணம் சம் பந்தப்பட்ட 'ராக்கெட் ஊழல்' பற்றி விசாரணை நடத்த எதிர்பு அதிபர் நாசர் உத்தரவிட்டுள்ளார்.

'மீண்டதூரம் பாய்ந்து தாக்கும்' என்று பிரமாதமாக விளம்பரப் படுத்தப்பட்ட கெய்ரோ ஏவு கணைத் தளங்கள், அரபு—இஸ் ரேல் போரின்போது செயலற்றுக் கிடந்தது பற்றி விசாரிக்க எகிப் தின் இராணுவப் படைகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இரகசியப் படை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

எகிப்தின் ஏவுகணைகள் வெறும் கேலிக்கூத்தாகிய விஷயத்தை முடிமறைக்க எகிப்திய தணிக்கை அதிகாரிகள் முயற்சித்து வருகின் றனர்.

மேற்கு ஜெர்மனி, இரஷ்யா, செக்கோஸ்லோவேகியா ஆகிய வற்றின் உதவியைக் கொண்டு எகிப்து கடந்த 7 ஆண்டுகளாகப் பலலகையான நீண்டதூர ஏவு கணைகளைத் தயாரிக்கும் வேலையை நடத்திவந்தது. அவை இஸ்ரே லுக்கு எதிராகவே ஏவுகணைகப் பட்டுவந்தன என்பது தெளிவு. கடந்த 4 ஆண்டுகளாக அந்த ராக்கெட்டுகள் பற்றி எகிப்து பிர மாதமாகப் பேசிவந்தது.

'கான்கரர்' — 'லிபரேட்டர்' என்று பிரமாதமான பெயர்கள் சூட்டப்பட்ட அந்த ராக்கெட்டு கள், கெய்ரோவில் நடந்த இரஷ் யப் பாணி இராணுவ அணிவகுப்பு களில் பெருமையாக இழுத்துச் செல்லப்பட்டன. சில மாதங் களுக்குமுன அவற்றில் சில ராக் கெட்டுகள், மேடனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன; அவை. எகிப் தின் இராணுவ வலிமையைப் பறைசாற்றும் வகையில் யேமனின் தலைகரில் தெருக்கள் வழியே இழுத்துச் செல்லப்பட் டன.

அரபு—இஸ்ரேல் போரில் எகிப் திய இராணுவம், மாபெரும் தவறு செய்து சிறுப் பாலவனத்தில் நுழைந்த சில மணி நேரத்துக்குப் பின்னர், எகிப்திய இராணுவத் தளபதியும் இப்போது பதவியில் ருந்து நீக்கப்பட்டவருமான பீல்ட் மார்ஷல் அமெர், அந்த ஏவுகணை கள் பற்றி பிரமாதமாகப் பேசி னார் ; 'எகிப்தில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள், இஸ்ரேலின் ஒவ் வொரு பகுதியையும் தாக்கி நொறுக்கிவிடக்கூடியவை' என்று அவர் வீரமுடன்கூறினர்;ஆனல் போரினபோது — இஸ்ரேலியருக் குத் தெரிந்தவரையில்—அந்த ராக் கெட்டுகளில் ஒன்றுகூடத் தரை யிலிருந்து கிளம்பவில்லை !

இரஷ்யா அளித்தவையும் தரை யிலிருந்து வானில் பாய்ந்து விமா னங்களைத் தாக்குபவையுமான எஸ். ஏ. எம். ஏவுகணைகள் எகிப்து கணிசமான அளவில் பயன்படுத்தி யது; ஆனலும் அவை, அவ்வள வாகப் பலனளிக்கவில்லை; எனி னும், எகிப்தின் இராணுவ வலி மைக்கு அடையாளமாகத் தயா ரிக்கப்பட்ட எகிப்திய ஏவுகணைள் தரையிலேயே நின்றுகொண்டிருந் தன! அந்த ஏவுகணைகளை கொண்ட தளங்கள் பலவற்றை இஸ்ரேலிய விமானப்படை தாக்க வில்லை என்றலும், அந்த ஏவுகணை கள் வெறுமனே நின்றுகொண்டி ருந்தன!

அதிபர் நாசருக்கோ அவ்வப் போது அத்திட்டம் முன்னேறி வருவதாக தகவல் கூறப்பட்டுக் தன. ராக்கெட் உற்பத்தி, அவற் றின் சாதனை ஆகியவை பற்றி அவருக்கு மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டுவந் தன. ஒரு சில ராக்கெட்டுகள்தான் வெற்றிகரமாக ஏவப்பட்டன; அவற்றினும் வழி செலுத்தும் ஏற் பாடுகள் கோளாறு கொண்டவை யாக இருந்தன.

நாசரோ, ஏவுகணைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய பிரமாத அறிக்கைகளே உண்மை என்றே நம்பிவந்தாகத் தோன்றுகிறது. நாசரின் பிரதான அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் பலர் சேர்ந்து செய்த மோசடிக்கு நாசர் இலக்காகியதாகவே தோன்றுகி றது.

போர் நிலைமை கட்டுமீறிப் போன சமயத்தில் ஏவுகணைகள் ஏவுமாறு மீண்டும் அமெர் உத்தரவிட்டபோதுதான், அது வரை வெளியே தெரியாமலிருந்த மோசடி அம்பலமாகியது; ஏனெ னில் அந்த ஏவுகணைள் தரையி லிருந்து கிளம்பவே இல்லை !

உணர்வோர் உள்ளம்

அப்பாவிகளை ஏமாற்றும் ரேஷன் கடைக்காரர்கள்

ஐயா,

வட சென்னையில் உள்ள சில அரிசி ரேஷன் கடைகளில் அரிசி நிறுத்துப் போடுவதில் மோசடி செய்கின்றனர். இதலுல் விவரமறி யாத அப்பாவி மக்கள் ஏமாற்ற மடைகின்றனர்.

என்னுடைய சொந்த அனுபவத் திலிருந்தே இதனைக் கூறுகிறேன். எனக்கு வாரத்திற்கு 5,600 கிராம் என்று ரேஷன் கார்டில் குறிப்பிட்டி ருக்கிறார்கள்; ஆனல் சென்ற வாரம் 5,000 கிராம்தான் கொடுத் தார்கள்; அதே நேரத்தில், 5,600 கிராமுக்குரிய பணம் பெற் றுக்கொண்டனர். கண்டுபிடித்து கேட்டபோது, சரியான அளவு அரிசி போட்டனர்.

இதேபோல், கே. இராமன் என்பவருக்கும் 7,700 கிராமுக்குப் பதில் 7,000 கிராம அரிசி போட் டார்கள்; 7,700 கிராமுக்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்ட னர்.

நான் இதுப்றறிக் கேட்டதற்கு, 'எங்களே ஒன்றும் செய்யமுடி யாது' என்று அந்தக் கடைக் காரர் கூறினர்.

இப்படி நடக்கும் அக்கிரமத் தைத் தடுத்து நிறுத்த அதிகாரி கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சி. கன்னியப்பன்
சென்னை—21.

★

ஏழைகளுக்கு மருத்துவ வசதி

ஐயா,

அரசு மருத்துவ மனைகளில் ஏழைகளுக்கு இலவச வைத்தியம் செய்யப்படுகிறது. ஆனல் ஏழை கள் என்பது, அரசாங்கக் கருத் துப்படி ரூ. 100-க்குக் குறைவாக மாத வருமானம் உடையவர்கள் தான். வியேவரி ஏற்றத்திற் கேற்ப ஊதியமும் உயர்ந்துவிட்ட இந்த காட்களில் ரூ. 100-க்குக் குறைவாக ஊதியம் பெறுவோர் இருப்பது மிக அரிதாகும். ரூ. 100-க்கு மேல் வருமானம் பெறுவோர் கட்டணம் கட்ட வேண்டும் என்று இருப்பதனல், பெரும்பாலோர் உண்மை ஊதி யத்தை மறைத்தே சொல்ல வேண்டிய கிர்ப்பந்தத்துக்கு உள ளாளின்றனர். ஆகையால் குறைந் தது ரூ. 250-க்கு மேல்தான் கட்ட ணம் கட்ட வேண்டிய மாத வரு மான வரம்பு என்று அரசு உத்தர விட வேண்டும். இது சம்பந்த மாக சென்னை மாகராட்சி, தனது மருத்துவ மனைகளில் கட்டணம் கட்ட வேண்டிய வருமான வரம்பு ரூ. 250-க்கு மேல்தான் என்று முடிவு செய்திருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

தமிழக அரசு இந்தச் சிக்கலைச் சிந்தித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மோ. கணபதி,
சென்னை-18.

'கூட்டுறவுத் துறையில் ஊழல்களுக்கு இடமிருக்கக்கூடாது'

'தவறுபவர்கள் மீது நடவடிக்கை அவசியம்'

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஜூன் 29—

தமிழகச் சட்டமன்றத்தில் கூட்டுறவு மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கழகத் தோழர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:—

பொன்னுலிங்கம்

திரு. பொன்னுலிங்கம் தெரிவித்ததாவது:—

"முன்பு சாதாரணமானவர்களாக இருந்தவர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவரானவுடன் ஏராளமான சொத்துக்கு அதிபதியாகி விடுகிறார்கள்; இதைத் தடுக்கச் சட்டம் திருத்தப்பெற வேண்டும்."

கே. எம். இராசகோபால்

தோழர் கே. எம். இராசகோபால் தெரிவித்ததாவது:—

"பொதுத்துறையில்— கூட்டுறவுத் துறையில், மக்கள் பணத்தையும் அரசின் பணத்தையும் கொள்ளை அடிப்பவன் எப்படிப்பட்ட மன்னாதி மன்னனாக இருந்தாலும் அவனை இழுத்துவந்து நிறுத்தவேண்டும்."

மதுரை கோவிந்தராசன்

திரு. கோவிந்தராசன் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது சதவீதச் சங்கங்கள் தவறு செய்யும் சங்கங்களாக இருக்கின்றன.

"அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையைத் துவக்கினார்கள். இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் துவக்கிய ஆலையைத் தேர்தல் முடிந்ததும் மூடிவிட்டார்கள். அதைத் திறக்க முயற்சி எடுக்கவேண்டும்."

வி. டி. அண்ணாமலை

தோழர் வி. டி. அண்ணாமலை பேசுகையில் தெரிவித்ததாவது:—

"கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் குற்றங்கள் செய்யும்போது அதிகாரிகள் கண்டிக்கவும் இல்லை— திருத்தவும் இல்லை; அதற்குப் பதிலாகக் கூடிக் குலவினார்கள்; இதுபற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்."

கொளத்தூர் கோதண்டம்

கொளத்தூர் கோதண்டம் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"கூட்டுறவுச் சட்டத்தில் உள்ள ஓட்டை உடைசல்களைச் சரிப்படுத்த வேண்டும்.

"கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கியவர்கள் அதைத் திருப்பித் தந்தால் மீண்டும் அவர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்று விதி திருத்தப்பட வேண்டும்."

குடவாசல் கிருட்டினமூர்த்தி

குடவாசல் கிருட்டினமூர்த்தி பேசுகையில் தெரிவித்ததாவது:—

"உழவர்களுக்குத் தேவையான அளவு இரசாயன உரம் வழங்கப்படவேண்டும்."

டி. இராசரத்தினம்

தோழர் டி. இராசரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவுச் சங்கத்தில் நடந்த ஊழல்கள் பற்றிப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை."

கோதாரிகுழு பரிந்துரை விரைவில் செயல்படுத்தப்படும்

"கோத்தாரி குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் செயல்படுத்தும்; ஆசிரியர்களின் ஓய்வு வயதை 60 ஆக உயர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்படும்"

என்று கல்வி அமைச்சர் இரா நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் கூறினார்.

அதிகாரச் சார்பில்லாத இரண்டு தீர்மானங்கள்மீது நடைபெற்ற விவாதத்திற்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்ததாவது:—

"ஒரேமாதிரியாக எல்லாப் பள்ளிகளிலும் நடைமுறை இருப்பதில்லை. ஓய்வு பெறும் வயது வரம்பும் அரசாங்க ஆசிரியர்களுக்கு ஒருவிதமாகவும், அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்கு வேறுவிதமாகவும் இருக்கிறது; இவற்றை மாற்றியமைத்து ஒரேமாதிரியாக்க வேண்டும்.

"ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாது கல்வித் துறையில் பணிபுரியும் மற்ற அலுவலர்களின் வயது வரம்பையும் உயர்த்த வேண்டியது குறித்து அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது."

உணவுப் பங்கீடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். ஜே. இராமசாமி:—"இரஷ்யாவிலிருந்து கோதுமை வந்து சேர்ந்து அதை நமது முதலமைச்சர் பெற்றுக்கொண்டதாகச் செய்தி படத்துடன் வெளியிடப்பட்டதே— அந்தக் கோதுமை முழுவதும் நமக்குத்தானா?"

பதில்:— "வெளிநாட்டிலிருந்து வரும் கோதுமை, மத்திய அரசுக்காகத்தான் வருகிறது; அதில் நமக்கு எவ்வளவு என்று மத்திய அரசுதான் ஒதுக்கும்."

பஞ்சாயத்து 'பைல்' எரிப்பு

எரித்தவர்கள் மீது நடவடிக்கை — சட்டமன்றத்தில் அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜூன் 30—

கமுதி ஊராட்சிமன்ற ஒன்றிப்புக்கு கடந்த ஏப்ரல் திங்களில் தாம் சென்றதாகவும், அப்போது 'பைல்'கள் எரிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை செய்ததாகவும், 'பைல்' எரிப்புக்குக் காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. முத்துசாமி, இன்று சட்டமன்றத்தில், திரு. கரு. சீமைச்சாமியின் கேள்விக்குப் பதிலளித்தார்.

கேள்வி:—"அதே ஊராட்சி ஒன்றிப்பில், தலைவரும் பணத்தைக் கையாடியிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், தலைவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஊழியர்கள்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது உண்மையா?"

பதில்:—"பணத்தைக் கையாடவில்லை என்றும், செலவுக்காகப் பணத்தைப் பெற்றுச் செலவழிக்காமல் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்தப் பணத்தை வசூலிக்கவும் ஏற்பாடாகியுள்ளது. பணம் வசூலிக்கப்பட்டவுடன் அனைவர் மீதும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது இந்த விவகாரம் கோட்டாட்சித் தலைவரின் விசாரணையில் இருந்துவருகிறது."

வி. கே. கோதண்டராமன்:— "சில பெரிய மனிதர்கள், பைல் எரித்தபோதே நடவடிக்கை எடுத்திருந்தால், இதைப்போல் மற்றவர்களும் அதில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். 'பைல்' எரித்தவர்கள் யாராயிருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர்:—"பைலை எரித்தவர்கள் யாராயிருந்தாலும்—கனம் அங்கத்தினராக இருந்தாலும் கூட நிச்சயம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

மொழிப் போரில் சிறை சென்றோர்

'சிறையில் நினைவுச் சின்னம் அவசியம்'

சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் வற்புறுத்தல்

சென்னை, ஜூன் 29—

தமிழகச் சட்டமன்றத்தில், நீதி நிர்வாக மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் கழகத் தோழர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:—

ஆர். ஆர். முனுசாமி

தோழர் ஆர். ஆர். முனுசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வழக்கறிஞர்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் இடையே 'பெட்டிசன் ரைட்டர்'கள் இருந்துகொண்டு வழக்கறிஞர்கள் கட்சிக்காரர்களைச் சந்திக்கவிடாமல் செய்கிறார்கள்; அவர்களது செயல்களைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்."

சு. துரைசாமி

திரு. சு. துரைசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கோவைச் சிறையில் 3,000 பேர் உள்ளனர். அங்கு உணவும் சுகாதாரமும் ஏற்றதாக இல்லை.

கடத்தல் பேர்வழிகளுக்கும் கள்ள கோட்டு அடித்தவர்களுக்கும் முதல் வகுப்புக் கொடுக்கும் முறை இருக்கக்கூடாது.

அரசியல் போராட்டத்திலும், மொழிப் போராட்டத்திலும், சிறை சென்றவர்களுக்குச் சிறையில் நினைவுச் சின்னங்கள் எழுப்பவேண்டும்.

பாளையங்கோட்டைச் சிறையில் ஊமைத்துரை, வ. உ. சி., மு. கருணாநிதியும், கோவைச் சிறையில் வ. உ. சி., பெரியார் ஈ. வெ. ரா., இராஜாஜி, ஆதித்தனாரும் இருந்தனர்; தலைவர்களுக்கு அந்தச் சிறைச்சாலைகளில் நினைவுச் சின்னங்கள் எழுப்பவேண்டும்."

ம. இராசாங்கம்

திரு. ம.இராசாங்கம் எம்.எல்.ஏ. பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வாடிக்கையாகக் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுபவர்கள் கடலூர், சேலம் போன்ற சிறைகளில் தனியாக வைத்திருக்க வேண்டும். முதுகுளத்தூர் கலவரம் தொடர்பாகத் தண்டிக்கப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்.

உத்தமபாளையத்தில் நீதிமன்றம் ஏற்படுத்தவேண்டும்."

நடக்க இருப்பவை

1--7--67

கோட்டைக்குப்பம்

தி.மு.க. சார்பில் வாக்காளர்கட்கு நன்றியறிவிப்பும், ஏ. ஜி. பாலகிருஷ்ணனுக்குப் பாராட்டும்; மாலை 6-30 மணிக்கு பஞ்சாயத்துத் திடலில்; தலைவர்: பி. ஏ. அமீது; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், வி. முனுசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., திரு நாவுக்கரசு பி.ஏ.பி.எல்., டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., ஆ. தங்கவேலு, எஸ். முத்து, எஸ். அப்துல் லத்தீப், எம். ஏ. பாரி, பி. ஏ. கரீம்; நன்றியுரை: ஏ. ஜி. பாலகிருஷ்ணன்.

மதுரை

லால்குடி நடராசன் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் மாலை 7 மணிக்கு ஆரப்பாளையத்தில்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., எம். எம். முத்தரசு., இராசு. செல்வம்.

2--7--67

விருதுநகர்

எம். எஸ். பெரியசாமி படிப்பக 12-வது ஆண்டுவிழா; இரவு 7 மணிக்கு அம்மன்கோயில் திடலில்; தலைவர்: எஸ். இரத்தினம்; பேசுவோர்: அமைச்சர் எம். முத்துச்சாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., தேவகி பாண்டியன், மற்றும் பலர். (காலை 9 மணிக்கு பாரப்பட்டித் தெருவில் ஆண்டுவிழா நிகழ்ச்சி நடைபெறும்.)

திண்டுக்கல்

சௌந்தரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு பேசுவோர்: கா. இராசா முகம்மது பி.ஏ., ச. அமுதன் பி.ஏ., கோ. இளங்கோவன்.

சீர்காழி

அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு தாடாளன் வடக்கு வீதியில்; தலைவர்: பி. வெங்கடேசன்; பேசுவோர்: கோ. சி. மணி, பொன். சொக்கலிங்கம்.

மதுரை

இராமாமிர்தத்தம்மையார் படிப்பக 7-வது ஆண்டு விழா; மாலை 7-மணிக்குகீழச்சந்தைப்பேட்டையில்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., எம். எம். முத்தரசு, எஸ். முனியப்பன்.

சென்னை முதல் வட்டம்

தி. மு க. சார்பில் மாலை 7 மணிக்கு தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில்; தலைவர்: து. கோவிந்தசாமி; பேசுவோர்: மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., டி. வேணுகோபால் எம்.சி., மு. இராமசாமி, மு. மாரிமுத்து, க. பட்டாபி, மற்றும் பலர்.

பெங்களூர்

38-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு பாரத் டாக்கீசுக்கு அருகில்; தலைவர்: என். ஜி. இலட்சுமணன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், தி. திராவிடமணி, வே. இளஞ்சேரன், என். முத்துசாமி, ஏ. கண்ணன், வெங்கட்ராமன் பி.எஸ்.சி., ஏ. சின்னையன்.

மயிலம்

தி: மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு சன்னதித் தெருவில்; தலைவர்: அ. வீரப்பன்; பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, துரைமுருகன் பி.ஏ., ஆ. தங்கவேலு, எஸ். நடராசன், எஸ். பக்கிரி, எஸ். வி. திருஞானம், எஸ். இராசகோபாலன், பி. இராமசாமி.

'நல்வரவு' மலர் வெளியீட்டு விழா

சென்னை, ஜூன் 30—

தி. மு. கழக அமைச்சரவைக்கு நல்வரவு தெரிவித்து, அறிவு நூலகத்தாரின் 'நல்வரவு' மலர் வெளியீட்டு விழா, இன்று (30—6—67) இரவு 7 மணிக்கு மவுண்ட் ரோட்டில் உள்ள பாலர் அரங்கில் நடைபெறும்; விழாவிற்கு, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி தலைமை வகிப்பார். மலரை வெளியிட்டு, திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. பாராட்டிப் பேசுவார்; கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், உள்ளாட்சித் துறை அமைச்சர் எம். முத்துச்சாமி, சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், அப்துஸ் சமது எம்.ஏ., எம்.பி., டாக்டர் எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

குழுக் கூட்டங்கள்

புதுவை வட்டம்

புதுவை வட்ட தி. மு. க. கூட்டம் 2—7—67 காலை 8-30 மணிக்கு முருங்கப்பாக்கம் மதிவாணன் திரைப் பட அரங்கில் நடைபெறும்; அதுபோது கழக ஆக்கப் பணிகள்—சிறப்புக் கூட்ட வரவு-செலவுக் கணக்கு—சிறப்புக் கூட்ட வரவு-செலவுக் கணக்கு— நகராட்சித் தேர்தல் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்; வட்டக் கழக உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் எம். ஏ. சண்முகம் அறிவிக்கிறார்.

மதுராந்தகம் வட்டம்

"மதுராந்தகம் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 2—7—67 பிற்பகல் 2-மணிக்கு மதுராந்தகம் கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது தொகுதி சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர்; சூணம்பேடு உயர்நிலைப் பள்ளிக்குப் பண உதவி செய்வது குறித்தும், மற்றும் பல பிரச்சினைகளும் ஆய்வுக்கு வரும்" என்று வட்டச் செயலாளர் கா. சு. தனபால் அறிவிக்கிறார்.

நீதித் துறையில் தமிழ் இடம் பெறும்!

சென்னை, ஜூன் 29—

"நீதித்துறையில் தமிழே இருக்க வேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கை.

"தமிழைப் படிப்படியாக நீதிமன்றங்களில் கொண்டுவருவதற்கு ஒரு சட்டக் குழு அமைக்கப்பட்டு அது பணியாற்றி வருகிறது. இதற்குத் தலைமை நீதிபதி தலைவராக இருக்கிறார்.

"முதலில் ஆங்கிலச் சொற்களைத் தொகுத்துப் பின் தமிழில் உருவாக்கித் தரவேண்டும். இதன் இடைக் காலத்தில், நீதிமன்றங்களில் சாட்சிகள் விசாரிக்கப்படும்போது தமிழிலேயே விசாரிக்கப்படுகிறார்கள். தமிழில் சாட்சியம் கூறப்படுவதை நீதிபதிகள்தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறார்கள்.

"எந்த மொழியில் சாட்சியம் அளிக்கப்படுகிறதோ, அந்த மொழியிலேயே பதிவு செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. இதுபற்றி மாவட்ட நீதிபதிகளை அழைத்து பேசி முடிவு சொல்வதாகத் தலைமை நீதிபதி சொல்லியிருக்கிறார். அவரது முடிவு தெரிந்ததும், முதல் திட்டமாக அது கொண்டு வரப்படும்."

—அமைச்சர் மாதவன்
(சட்டமன்றத்தில்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.